# செய்தி வெளியீடு

## செலவு அணுகுமுறையால் இலங்கையின் தேசிய கணக்குகள் மதிப்பீடுகள்

### 2016 முதலாம் காலாண்டு

தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு

தொ.பே: 94-011-2147071 தொ.நகல்: 94-11-2877938 மின்னஞ்சல்: national.accounts@statistics.gov.lk

……………………………………………………………………………………………….

இலங்கையின், 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான செலவு அணுகுமுறையால் நடப்பு, நிலையான (2010) விலைகளில் மதிப்பிடப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி, தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்படுகிறது.

தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தால் ஏற்கனவே இலங்கையின், 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான உற்பத்தி அணுகு முறையால் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜனவரி, பெப்ரவரி, மார்ச்) நடப்பு மற்றும் நிலையான (2010) விலைகளில் முறையே ரூபா 2,979,745 மில்லியன்கள் மற்றும் ரூபா 2,088,024 மில்லியன்களாகவும், மேலும் இக் காலாண்டுக்குரிய வளர்ச்சி வீதம் 5.5 சதவீத நேர் வளர்ச்சியை காட்டியதாகவும் வெளியிடப்பட்டது. ஒரே காலாண்டுக்கான இத் தொகுத்த குறிகாட்டிகள் செலவு அணுகுமுறையால் கணிக்கும் போது மாற்றமடைய மாட்டாது. ஆனால் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கூறுகள் இவ்விரு அணுகுமுறையிலும் மாற்றமடையும்.

செலவு அணுகுமுறையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பாரிய கூறுகளாவன: இறுதி நுகர்வுச் செலவு, மொத்த மூலதனவாக்கம் மற்றும் பொருட்களினதும் பணிகளினதும் வெளிநாட்டு நிலுவை என்பனவாகும். 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுக்கான இக் கூறுகளின் பங்களிப்புகள், மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு நடப்பு விலைகளில் முறையே 76.2 சதவீதம், 29.1 சதவீதம் மற்றும் -5.3 சதவீதமும் ஆகும்.

இறுதி நுகர்வுச் செலவின் உப பிரிவுகளுக்கிடையில், 'குடித்தன இறுதி நுகர்வுச் செலவு' மற்றும் 'அரச இறுதி நுகர்வுச் செலவு' முறையே சிறிய அளவான

வளர்ச்சி வீதமான 3.2 சதவீத, 2.7 சதவீதத்தையும் பதிவு செய்கிறது. அரச இறுதி நுகர்வுச் செலவின் பகுதியான 'தனிநபர் நுகர்வுச் செலவு' உயர் வளர்ச்சி வீதமான 8.9 சதவீதத்தை பதிவு செய்கிறது. இவ்வேளையில் அரச கூட்டு நுகர்வுச் செலவு 2015 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ரூபா 96,471 மில்லியன்களாக பதிவு செய்ததுடன், 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ரூபா 96,365 மில்லியன்களாக சிறிய அளவான மறை 0.1 சதவீத வளர்ச்சியை பதிவு செய்கிறது.

மொத்த நிலையான மூலதனவாக்கம் நிலையான (2010) விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு ரூபா 620,968 மில்லியன் வரை அதிகரித்து 11.1 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது. இருப்புக்களின் மாற்றம் 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டு குறிப்பிடத்தக்க வளர்ச்சியான 142.4 சதவீத வளர்ச்சி வீதத்தை இக் காலப் பகுதியை கருதும் போது பதிவு செய்கிறது.

பொருட்களினதும் பணிகளினதும் வெளிநாட்டு நிலுவைக் கூறு இரண்டு உப நடவடிக்கைகளைக் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. அவையாவன: 'பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி' மற்றும் 'பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி'. 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதி நிலையான (2010) விலையில் ரூபா 413,827 மில்லியன்களை அடைந்ததுடன், 2015 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டுடன் ஒப்பிடும் போது 1.8 நேர் சதவீத வளர்ச்சி வீதத்தை காட்டுகிறது. இக் காலப் பகுதியைக் கருதும் போது, 2016 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 'பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதி' 1.9 சதவீத வளர்ச்சி வீதத்தை பதிவு செய்கிறது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அமைய, 2016 ஆம் முதலாம் காலாண்டுக்கான செலவு அணுகுமுறையின் தேசிய கணக்குகள் மதிப்பிடலின் மேலதிக விபரங்கள் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.statistics.gov.lk)

கலாநிதி. ஏ. ஜே. சதரசிங்க
**பணிப்பாளர் நாயகம்**
**தொகைமதிப்பு மற்றும்புள்ளிவிபரத் திணைக்களம்**